**செ. வெ.எண்.565** **நாள்:06.07.2010**

## <u>செய்திக் குறிப்பு</u>

பொருள்: நெடுஞ்சாலைத் துறை – நிர்வாக சீரமைப்பு – முதன்மை இயக்குநர் (Director General) பணியிடம் தோற்றுவிப்பு – தொடர்பாக.

*****

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (Tamil Nadu Road Sector Project) ஒரு பகுதியாக மாநில நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்தினை சீரமைத்து செயல் திறனை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, நெடுஞ்சாலைத் துறையில் தலைமைப் பொறியாளர்களைக் கொண்டு இயங்கி வரும் 8 அலகுகளின் பணிகளை ஒருங்கிணைத்து துறையின் ஒட்டு மொத்த செயல்பாட்டினை மேம்படுத்த அரசுக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் **முதன்மை இயக்குநர்** (Director General) பதவி ஒன்று தோற்றுவிக்கப்பட்டு அப்பதவியில் துறையின் மூத்த தலைமைப் பொறியாளர் திரு. ப.ஹரிராஜ், அவர்களை பணியமர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. அரசாணைகளுக்கேற்ப திரு. ப.ஹரிராஜ் அவர்கள் இன்று **(06.07.2010)** நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநராக பணியில் சேர்ந்துள்ளார். முதன்மை இயக்குநராக பணியேற்றுள்ள திரு. ப. ஹரிராஜ் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் தள ஆய்வு மற்றும் வடிவமைப்புப் பணிகளில் மிகுந்த அனுபவம் உள்ளவர். மேலும், இவர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர், திட்டம் அலகின் தலைமைப் பொறியாளர் மற்றும் பொது அலகின் தலைமைப் பொறியாளர் போன்ற பொறுப்புகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2) சாலை மற்றும் பாலப் பணிகளுக்கென பிரத்தியேகமாக **நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை** என்ற பெயரில் **1946**–ஆம் ஆண்டிலேயே தனித்துவம் வாய்ந்த துறையை தோற்றுவித்தது மற்றும் சாலை மற்றும் பாலப்பணிகள் தொடர்பான ஆராய்ச்சி பணிகளுக்கென **1956**–ஆம் ஆண்டில் நாட்டிலேயே முதன் முறையாக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற அமைப்பை ஏற்படுத்தியது போன்றவற்றில் முதன்மை மாநிலமாக திகழும் நமது தமிழகம், மாநில அளவிலான நெடுஞ்சாலைத் துறைக்கென முதன்மை இயக்குநர் என்ற பதவியை உருவாக்கியதிலும் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### <u>வெளியீடு:</u>

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9